அரசியல் சிந்தனை
நூல்வரிசை
26

# தமிழர் தாயகத்தின் கூட்டிருப்பைச் சிதைக்கும் திருகோணமலைக் குடியேற்றங்கள்.

சி.அ.யோதிலிங்கம்

வெளியீடு
சமூக விஞ்ஞான
ஆய்வு மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சமூக விஞ்ஞான ஆய்வு மையம் மாதம் தோறும் வெளியிடும் அரசியல் சிந்தனை நூல் வரிசையில் 26 வது நூலாக சி.அ.யோதிலிங்கம் எழுதிய "தமிழர் தாயகத்தின் கூட்டிருப்பைச் சிதைக்கும் திருகோணமலைக் குடியேற்றங்கள்" என்ற இச்சிறு நூல் வெளிவருகின்றது.

இனப்பிரச்சினை என்பதே தமிழ் மக்கள் ஒரு தேசமாக, தேசிய இனமாக இருப்பது அழிக்கப்படுவது தான். அதாவது தேசத்தைத் தாங்குகின்ற தூண்களாக இருக்கின்ற நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பன அழிக்கப்படுவது தான். இதில் நிலப்பறிப்பு மிகவும் முக்கியமானது.

1947 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சோல்பரி யாப்புடன் முழு இலங்கைத்தீவும் ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. ஆட்சி அதிகாரம் பெரும்பான்மைத் தேர்தல் முறையின் கீழ் கொண்டு வரப்பட்டதால் தமிழ் மக்கள் ஆட்சி அதிகார கட்டமைப்பிலிருந்து இயல்பாகவே தூக்கி எறியப்பட்டனர். தொடர்ந்து சோல்பரி யாப்புக்காலம் முழுவதும் (1947-1972) ஆட்சி அதிகாரக்கட்டமைப்பை சிங்கள மயமாக்கும் செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த செயல் திட்டங்களில் ஒன்று தான் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களாகும்.

ஆரம்பத்தில் மட்டக்களப்பு தெற்கில் கல்லோயாத்திட்டம் என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தைத் தொடர்ந்து தமிழர் தாயகத்தின் மையமாக இருக்கின்ற திருகோணமலை மாவட்டத்திலேயே சிங்களக் குடியேற்றங்கள் முடுக்கி விடப்பட்டன. இம்மாவட்டத்தில் திட்டமிட்ட விவசாயக் குடியேற்றம், சட்ட விரோத விவசாயக் குடியேற்றம், வியாபாரக் குடியேற்றம், மீனவர் குடியேற்றம், கைத்தொழில்க்குடியேற்றம், புனித பிரதேச குடியேற்றம், முப்படைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணைகளுக்கான குடியேற்றம், என அனைத்து குடியேற்ற முறைகளும் பரீட்சித்து பார்க்கப்பட்டன. திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்கள் அதில் முக்கியமானவையாகும்.

இச்சிறு நூல் இம்மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்களையே விபரிக்கின்றது. இன்று அடுத்த முக்கிய மாவட்டமான முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந் நிலையில் அதனைத்தடுப்பதற்கு இச்சிறுநூல் ஓரளவிற்காவது உதவும் என நம்புகின்றோம்.

வாசகர்கள் எமது ஏனைய நூல்களுக்கு தந்த ஆதரவினைப் போல இந்த நூலுக்கும் தருமாறு தாழ்மையாக வேண்டுகின்றோம்.

கொரோனா நோய் காரணமாகவும் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாகவும் சில மாதங்கள் நூல்களைக் கொண்டு வர முடியவில்லை. வாசகர்களை மன்னிக்குமாறு வேண்டுகின்றோம்.

இந்நூலுக்கான அடிப்படைத்தகவல்களை முன்னாள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அ.தங்கத்துரை அவர்கள் தந்திருந்தார். அவருக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்வதில் மனநிறைவடைகின்றோம்.

நன்றி

**சமூக விஞ்ஞான ஆய்வு மையம்**
**28,செம்மணி வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**சமர்ப்பணம்**

**திருகோணமலை மாவட்டத்தை சிங்கள மயமாக்கலிருந்து பாதுகாப்பதற்காக அயராது உழைத்த முன்னாள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அ.தங்கதுரைக்கு இச்சிறுநூல் சமர்ப்பணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தாயகத்தின் கூட்டிருப்பைச் சிதைக்கும் திருகோணமலைக் குடியேற்றங்கள்.

உலகின் எல்லா இடங்களிலும் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையை வலுவிழக்கச் செய்வதற்கு ஆதிக்கச் சக்திகள் குடியேற்றங்களையே ஒரு பிரதான ஆயுதமாக பயன்படுத்துகின்றன. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கைகளின் அடிப்படைகளை இல்லாமல் செய்வதற்கும், போர்க்காலங்களில் போராளிகளை இலகுவாக ஒடுக்குவதற்கும், ஒடுக்கப்படும் மக்கள் தங்களிடையே நெருங்கிய தொடர்புகளை வைத்துக்கொள்ளாமல் கூறுபோடுவதற்கும், தீர்வு என வரும்போது குடியேற்ற மக்களைக்காட்டி தீர்வு முயற்சிகள் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு சார்பாக செல்லவிடாமல் தடுப்பதற்கும், இக்குடியேற்றங்களே அவர்களுக்கு பெரிதும் பயன்படுகின்றன.

பாலஸ்தீனத்தில் யூதர்களின் குடியேற்றம், அயர்லாந்தில் புரட்டஸ்தாந்தவர்களின் குடியேற்றம், கொசேவாவில் சேர்பியர்களின் குடியேற்றம், திபெத்தில் சீனர்களின் குடியேற்றம், கிழக்குத்தீமோரில் இந்தோனேசியர்களின் குடியேற்றம் பிலிப்பைன்ஸ் மிந்தானோவில் கிறீஸ்தவர்களின் குடியேற்றம் என்பன இந்த வகையிலேயே நடைபெற்றன.

உலக நாடுகளின் நிர்ப்பந்தங்களினால் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது இக் குடியேற்றங்களே பெரும் தடைகளாக விளங்குகின்றன. கிழக்குத் திமோர் மக்களின் சுதந்திரத்தினை அங்கு குடியேறியுள்ள இந்தோனேசியர்கள் தடுத்ததையும், பாலஸ்தீன சுயாட்சி ஒழுங்காகச் செயற்படுவதை மேற்குக்கரை, காஸா பகுதிகளில் குடியேறிய யூதக் குடியேற்ற வாசிகள் தடுப்பதையும் இந்த வகையிலேயே விளங்கிக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையைச் செயலற்றதாக்குவதற்கு ஆட்சியாளர்கள் குடியேற்றங்களையே ஒரு பிரதான கருவியாகப் பயன்படுத்தினர். தமிழர்களின் தனி வழி அரசியல் 1920களிலேயே உணரப்பட்டதால் அக்காலத்தில் இருந்தே சிங்களப் பேரினவாதிகளிடம் இக்குடியேற்ற எண்ணம் வலுப்பெறத் தொடங்கியிருந்தது. 1931 லிருந்து 1947 வரையான டொனமூர் அரசியல் யாப்பு காலப்பகுதியில் சிங்களவர் களிடம் ஒப்படைக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தைக் கொண்டே இதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டன. இந்த வகையிலேயே 1941 இல் கல்லோயா அபிவிருத்தித் திட்டம் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுதந்திரத்தினைத் தொடர்ந்து தமிழர் அரசியல் சமத்துவ உரிமை என்பதற்கப்பால் தாயக இறைமை என்பதனை நோக்கி வளரத் தொடங்கியது. தாயக குறியீடாக வடக்கு – கிழக்கு நிலப்பரப்பு என்பது எழுச்சியடைந்தது. இத் தாயக இறைமை சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைத் தடுக்கும் வகையில் ஒரு நீண்டகால இலக்கில் குடியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு அவர்கள் பிரதானமாக தேர்ந்தெடுத்த இடமே திருக்கோணமலை மாவட்டமாகும். திருகோணமலை மாவட்டத்தினை கடற்கரைப் பக்கமாக வில்போல சுற்றி வளைத்து இவை மேற்கொள்ளப்பட்டன. ஏனைய தமிழ்ப்பிரதேசங்களுடனான தொடர்புகளை துண்டித்தலே இத் திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. ஒரு வில்போல நீளமாக வளைந்திருக்கும் குடியேற்றப் பிரதேசமான சேருவல தேர்தல் தொகுதியினை பார்க்கும்போது இவ்வுண்மை தெளிவாக புலப்படும்.

இந் நிலையில் தமிழ் மக்களின் புதிய தலைமுறையினர் இக் குடியேற்றங்களைப் பற்றியும், அதற்குப் பின்னால் உள்ள சதி முயற்சிகளைப் பற்றியும், பேரினவாதிகளின் மூலோபாயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரோபாயங்கள் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும். இவ்வறிந்து கொள்ளலே இப் புற்றுநோயை இந்த மட்டத்திலாவது இடைநிறுத்தி மேலும் வளராமல் தடுப்பதற்குரிய மார்க்கங்களைப் புலப்படுத்தும். பேரின வாதிகளின் செயற்பாட்டிற்கு மாற்றான ஒரு செயற்பாட்டுத் தளத்தையும் திறந்துவைக்கும். மாற்று மருந்து வகைகளையும் கண்டு பிடிக்கும்.

சுதந்திரத்திற்கு முன்னர் திருமலை மாவட்டத்தில் நிரந்தரமாக குடியேறியிருந்த சிங்கள மக்கள் என விரல் விட்டு எண்ணக்கூடியோரே வாழ்ந்திருந்தனர். இதற்குப் புறம்பாக திருமலை நகரத்தில் மட்டும் துறைமுக வேலைகளுக்காகவும் பிரித்தானிய கடற்படைத்தள வேலைகளுக்காகவும் தற்காலிகக் குடியேறிகள் சிலர் வாழ்ந்தனர். சுதந்திரத்துக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட திட்டமிட்ட விவசாயக் குடியேற்றத் திட்டங்களைத் தொடர்ந்தே பெரும் எண்ணிக்கையானவர்கள் குடியேறத் தொடங்கினர். தொடர்ந்து இவற்றைப் பலப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட சட்டவிரோத விவசாயக் குடியேற்றத் திட்டங்கள், கைத்தொழில் குடியேற்றங்கள், வியாபாரக் குடியேற்றங்கள், மீனவர் குடியேற்றங்கள், புனித பிரதேசக் குடியேற்றங்கள், முப்படைப் பண்ணைகளுக்கான குடியேற்றங்கள் என்பன சிங்களவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தன. இவ் குடியேற்றங்களின் வளர்ச்சியினாலேயே திருக்கோணமலை மாவட்டத்தில் 1827 இல் 1.3 %ஆக இருந்த சிங்களவர் எண்ணிக்கை 1981 இல் 33.62 % ஆக அதிகரித்தது. அதேவேளை 1827இல் 81.82% ஆகவிருந்த தமிழர்களின் எண்ணிக்கை 36.4% ஆகக் குறைந்தது.

இனி திருகோணமலையின் முக்கிய திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்களைப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்லைத்திட்டம்

இத்திட்டமே திருகோணமலை மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட முதலாவது திட்டமிட்ட விவசாய குடியேற்றமாகும். இது 1949 ஆண்டு உருவாக்கப்பட்டது. 1953 ஆண்டு தொடக்கமே மக்கள் குடியேறத் தொடங்கினர். மகாவலி ஆற்றை மறித்து வாய்க்கால் மூலம் திருப்பி அல்லைக் குளத்தை நிரப்பி அதனோடு சூழவுள்ள கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதற்காகவே இத் திட்டம் உருவாக்கப்பட்டது. இதற்கு முன்னரும் கூட இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1868 இல் வாய்க்கால் வெட்டப்பட்டு தாழ் நிலமாக இருந்த பகுதிகள் இணைக்கப்பட்டு அல்லைக்குளம் உருவாக்கப்பட்டது. பின்னர் 1910ம் ஆண்டு குளம் பலப்படுத்தப் பட்டதோடு வாய்க்கால்களும் பெரிதாக்கப்பட்டன. 1949 லேயே இது மிகப் பெரிய விவசாயத் திட்டமாக புனரமைக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இத் திட்டத்தின் மூலம் 17500 ஏக்கர் விவசாய நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஒரு குடும்பத்திற்கு 4 ஏக்கர் வயல் நிலமும் ஒரு ஏக்கர் மேட்டுநிலமும் என பகிர்ந்தளிக்கப்பட்டது. இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட நிலங்களில் 75% நிலங்கள் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. 25% வீதமான நிலங்களே தமிழ் முஸ்லீம், மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. காணி உரிமை பெறுபவர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரும் போது சிங்கள மக்கள் இலங்கையிலுள்ள எல்லா மாவட்ட அரசாங்க அதிபர்களினூடாகவும் கோரப்பட்டனர் ஆனால் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை திருகோணமலை மாவட்டத்தில் அதுவும் மூதூர்ப் பகுதியில் இருப்பவர்கள் மட்டுமே கோரப்பட்டனர்.

இப் பாராபட்சங்களை அன்றிருந்த தமிழ் பேசும் அரசியல் சக்திகள் தடுத்திருக்கலாம். அவர்கள் அது தொடர்பான முயற்சிகளில் எதிலும் இறங்கியதாகத் தெரியவில்லை. அன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலகட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலையிலும் மூதூரிலுமாக இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட 1949ல் திருகோணமலைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எஸ்.சிவபாலனும் மூதூர்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த A.R.A.M அபூபக்கரும் விளங்கினர். மக்கள் குடியேறத் தொடங்கிய 1953 ம் ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இராசவரோதயமும் மூதூர்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக சுயேட்சையான M.E.H முகமட் அலியும் விளங்கினர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இதில் அக்கறையற்று இருந்தாலும் தமிழ்த்தேசியத்தையும் அதன் அடிப்படையிலமைந்த சமஸ்டிக் கோரிக்கையையும் முன்னெடுத்த அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி இதில் போதிய அக்கறை காட்டாதது தான் மிகவும் கவலைக்குரியது. இதன் பின்னர் 1959ல் இருந்து மூதூர்த்தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்டு 1977 வரை வ.ஏகாம்பரம், அ.தங்கத்துரை போன்றவர்கள் உறுப்பினர்களாக இருந்தபோதும் குடியேற்றங்களைப் பொறுத்தவரை அவர்களின் செயற்பாடு போதியதாக இருக்கவில்லை. 1977 இல் மூதூர்த்தொகுதி மீளவும் ஒற்றை அங்கத்தவர் தொகுதியாக மாற்றப்பட்டது. இதன் பகுதிகள் சேருவல தேர்தல் தொகுதியுடன் சேர்க்கப்பட்டன. இதன்மூலம் மூதூர் பிரதேசத்தில் தமிழ் மக்களுக்கிருந்த உறுப்புரிமை இல்லாமல் செய்யப்பட்டது.

காணி பெறுபவர்களுக்குரிய தகைமைகளைப் பற்றிக் குறிப்பிடும் போது விண்ணப்பதாரிகள் விவசாயிகளாகவும் திருமணம் புரிந்தவர்களாவும், விவசாயக் காணிகளைச் சொந்தமாகக் கொண்டிராதவர்களாகவும் இருக்கவேண்டும் எனக் கூறப்பட்டது. ஆனால் நடைமுறையில் தமிழ்பேசும் மக்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தவரை இத் தகைமைகள் கடைப்பிடிக்கப்பட்டன. சிங்கள மக்களைப் பொறுத்தவரை இவை காற்றில் பறக்கவிடப்பட்டன. விவசாயமே தெரியாதவர்களும் நிலங்களைச் சொந்தமாக வைத்திருந்தவர்களும் தாராளமாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கந்தளாய் திட்டம்.

இத் திட்டம் 1950 ம் ஆண்டு கந்தளாய் குளத்தினை மையமாக வைத்து உருவாக்கப்பட்டது. 1954ம் ஆண்டுதொடக்கம் மக்கள் குடியேறத்தொடங்கினர். இத் திட்டத்தின் கீழ் 24,750 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்பட்டது. இதில் 14,360 ஏக்கர் நெல் செய்கைக்காகவும் 10,420 ஏக்கர் கரும்புச் செய்கைக்காகவும் எனப் பகிர்ந்தளிக்கப்பட்டது. 80% மான காணிகள் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதேவேளை 20% மான காணிகளே தமிழ் முஸ்லீம் மக்களுக்கென பகிர்ந்தளிக்கப்பட்டன. அல்லைத் திட்டத்தினைப் போலவே ஒரு குடும்பத்திற்கு 4 ஏக்கர் நெற்செய்கை நிலமும் 3 ஏக்கர் மேட்டு நிலமும் வழங்கப்பட்டது.

கந்தளாய்ப் பிரதேச சபையும், கந்தளாய் பிரதேச செயலர் பிரிவும் இக்குடியேற்றப் பிரதேசத்தை மையமாக வைத்தே உருவாக்கப்பட்டன. கந்தளாய் பிரதேசசபை எல்லைக்குள் வசிக்கும் 22,737 வாக்காளர்களில் மிகப் பெரும்பான்மையோர் சிங்களவர்களாகவே உள்ளனர். இப் பிரதேச சபை 397.30 ச.மைல் விஸ்தீரணத்தைக் கொண்டது. இன்று திருகோணமலை மாவட்ட சிங்கள மக்களுக்கு தலைமைதாங்கும் பிரதேசமாக கந்தளாய்ப் பிரதேசமே உள்ளது.

## பதவியாத்திட்டம்

திருகோணமலை மாவட்டத்தின் வடபகுதியை சிங்கள மயமாக்குவதற்காக இத் திட்டம் 1954 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1956ம் ஆண்டு தொடக்கம் மக்கள் குடியேறத் தொடங்கினர். அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பதவியாக் குளத்தினை மையமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தே உருவாக்கப்பட்டது. புதவியாக்குளம் அனுராதபுர மாவட்டத்தில் இருந்தபோதும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள 2400 ஏக்கர் காணிகளுக்கு நீர்பாய்ச்சுவதை நோக்கமாகக் கொண்டு இக் குளம் உருவாக்கப்பட்டது.

இக் குடியேற்றத்திற்காக 2400 ஏக்கர் நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆரம்பத்தில் திட்டக்காணி முழுவதும் தமிழர்களுக்கே வழங்கப்படுவதாகக் கூறப்பட்டிருந்தது. ஆனால் 1958ன் கலவரத்தினைத் தொடர்ந்து தென்னமரவாடியை அண்டியுள்ள பகுதிகளில் வசித்திருந்த தமிழர்கள் பலாத்காரமாக அகற்றப்பட்டு அவ்விடங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். தற்போது இப்பகுதி 100% சிங்கள மக்களைக் கொண்ட பகுதியாகவே உள்ளது. இவர்களுக்காக பதவி சிறீபுர என்னும் பெயரில் ஒரு பிரதேச சபையும், சிங்கள பிரதேச செயலர் பிரிவும் உருவாக்கப்பட்டுள்ளது. இப் பிரதேச சபையின் வாக்காளர் எண்ணிக்கை 7,023 என்ற அளவுக்கு மிகக் குறைவாக இருந்தபோதும் குடியேற்றங்களுக்கு அரசியல் உறுதிப்பாட்டை கொடுக்கவேண்டும் என்பதற்காக பிரதேச சபை உருவாக்கப்பட்டது. இப் பிரதேச சபை 217.70 ச.மைல் விஸ்தீரணத்தை கொண்டதாகும்.

பதவிக்குளம் என்ற பாரம்பரிய தமிழ்ப் பிரதேசமே பின்னர் பதவியா என மாற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிசன மதிப்பீடு – திருகோணமலை மாவட்டம்

| வருடம் | தமிழர் | % | முஸ்லீம்கள் | % | சிங்களவர் | % |
|---|---|---|---|---|---|---|
| 1827 | 15,663 | 81.8 | 3,245 | 16.9 | 250 | 1.3 |
| 1881 | 14,394 | 64.8 | 5,746 | 25.9 | 935 | 4.2 |
| 1891 | 17,117 | 66.4 | 6,426 | 25.0 | 1,109 | 4.3 |
| 1901 | 17,069 | 60.0 | 8,258 | 29.0 | 1,203 | 4.2 |
| 1911 | 17,233 | 57.9 | 9,714 | 32.6 | 1,138 | 3.8 |
| 1921 | 18,586 | 54.5 | 12,846 | 37.7 | 1,501 | 4.4 |
| 1946 | 33,769 | 44.5 | 23,219 | 30.6 | 11,606 | 15.3 |
| 1953 | 37,517 | 44.7 | 28,616 | 34.1 | 15,296 | 18.2 |
| 1963 | 54,050 | 39.1 | 42,560 | 30.8 | 40,950 | 29.6 |
| 1971 | 71,749 | 38.1 | 59,924 | 31.8 | 54,744 | 29.1 |
| 1981 | 93,510 | 36.4 | 74,403 | 29.0 | 86,341 | 33.6 |

பரப்பளவு சதுர கிலோமீற்றர் 2618.2 (ச.கி)

## மொறவேவா திட்டம்

முதலிக்குளம் என்ற தமிழ்ப்பிரதேசமே பின்னர் மொறவேவா என்ற சிங்களப்பெயராக மாற்றப்பட்டது. இத்திட்டம் 1959ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. 1962 ம் ஆண்டு தொடக்கமே மக்கள் குடியேறத் தொடங்கினர். திருகோணமலையிலுள்ள பிரித்தானிய கடற்படைத்தளத்தில் வேலை செய்தவர்கள் தளம் மூடப்பட்டதால் வேலை இழந்தபோது அவர்கள் விவசாயம் செய்வதற்கென்றே இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் 4040 ஏக்கர் காணிகள் பங்கிடப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் திட்டத்தின் கீழ் காணிகள் பங்கிடுவதற்கான காணிக் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது தமிழரசுக் கட்சித் தலைவரில் ஒருவரான வன்னியசிங்கம் நேரடியாகவே அதில் பங்கேற்றிருந்தார். காணிகள் பங்கிடப்படும் போது 55 வீத காணிகள் தமிழ் - முஸ்லீம் மக்களுக்கும் 45% காணிகள் சிங்கள மக்களுக்கும் என ஒதுக்கப்பட்டது. தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நேரடியாக சமூகமளித்தும் கூட மூன்று இனங்களுக்கும் சமமாகவோ, அல்லது குறைந்தத பட்சம் திருகோணமலை மாவட்ட இன விகிதாசாரப்படியோ காணிகள் பங்கிடப்படாதது கவலைக்குரியது.

ஆனால் மேட்டு நிலத்தில் கட்டப்பட்ட வீடுகள் பங்கிடப்பட்டபோது 75 வீதமான வீடுகள் சிங்கள மக்களுக்கு கொடுக்கப்பட்டது. 25 வீதமான வீடுகள் மட்டுமே தமிழ் முஸ்லீம் மக்களுக்கு கொடுக்கப்பட்டது. வீடுகள் கொடுக்கப்படாததால் திருகோணமலையில் இருந்த தமிழ் முஸ்லீம் மக்கள் உடனடியாக குடியேறவில்லை. சிங்கள மக்கள் மட்டுமே குடியேறினர். தொடர்ந்து வந்த இனக் கலவரங்களினால் தமிழ்-முஸ்லீம் மக்கள் குடியேற தயக்கம் காட்டவே நாளடைவில் குடியிருக்காத நிலங்கள் இரத்துச் செய்யப்பட்டு அவ் இடங்களிலும் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். 1971ம் ஆண்டு விமானப் படையினருக்கான விவசாயப் பண்ணை அங்கு உருவாக்கப்பட்டபோது அதனைச் சாட்டாக வைத்தும் பல சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். விமானப் படையினரின் பண்ணை சிங்களக் குடியேற்றத்தை மேலும் பலப்படுத்தியதால் எஞ்சியிருந்த ஒரு சில தமிழ் குடும்பங்கள் கூட பின்னர் வெளியேறின.


இக் குடியேற்றத்தினை மையமாக வைத்தே மொரவேல சிங்கள பிரதேச சபை உருவாக்கப்பட்டது. இது 322 ச.மைல் விஸ்தீரணத்தை உள்ளடக்கியுள்ளது. தமிழர்கள் எவரும் இப் பிரதேசத்தில் இல்லை 1994ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைத் தேர்தலில் 38.08 வீதமான வாக்காளர்களே வாக்களித்திருந்தனர். மொத்தமாக 2200 வாக்குகளே அளிக்கப்பட்டன. மக்கள் மிகக் குறைவாக இருந்தபோதும் குடியேற்றத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதற்காக பிரதேச சபை உருவாக்கப்பட்டு தேர்தல் நடைபெற்றது. பிரதேச சபையில் மொத்தம் 9 உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். அவர்கள் அனைவரும் சிங்களவர்களேயாவர்.

சிங்கள குடியேற்ற திட்டங்கள்



மகாதிவுல்வெவ திட்டம்

பெரியவிளான் குளம் என்னும் தமிழ்ப் பிரதேசமே இத்திட்டம் கொண்டுவரப்பட்ட பின் மகா திவுல்வெவ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத் திட்டம் 1979 ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. 1981ம் ஆண்டு தொடக்கம் மக்கள் குடியேற்றம் நடைபெற்றது. இத்திட்டத்தின் மூலம் 1200 ஏக்கர் காணி பங்கிடப்பட்டது. இதில் 65 வீதம் சிங்கள மக்களுக்கும் 35 வீதம் தமிழ் முஸ்லீம் மக்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பங்கிடப்பட்டது. இவ்வாறு பங்கிடப்படும் போது ஒரு குடும்பத்திற்கு 2 ஏக்கர் வயல் நிலமும் ஏக்கர் மேட்டு நிலமும் வழங்கப்பட்டது.

இத்திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்களை மையமாக வைத்தே 1977 இல் சேருவல தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. இத் தேர்தல் தொகுதி வந்த பின்னரே சிங்களப் பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றத்திற்கு முதன் முதலாக தெரிவு செய்யப்பட்டார். 1977 க்கு முன்னர் சிங்களப் பிரதிநிதித்துவம் என்பது திருகோணமலை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்தில் இருக்கவில்லை. தமிழ்ப் பிரதிநிதிகளும் முஸ்லீம் பிரதிநிதிகளும் மட்டும் இருந்தனர். 1960 க்கு முன்னர் திருகோணமலை, மூதூர் எனும் இரு தொகுதிகள் மட்டுமே இருந்தன. திருகோணமலை தொகுதியிலிருந்து ஒரு தமிழரும் மூதூர் தொகுதியிலிருந்து ஒரு முஸ்லீமும் தெரிவு செய்யப்பட்டனர். 1960 ம் ஆண்டு தொடக்கம் மூதூர் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக மாற்றப்பட்டதால் அத் தொகுதியிலிருந்து ஒரு தமிழர், ஒரு முஸ்லீம் என இருவர் தெரிவுசெய்யப்பட்டனர். இதனால் மொத்தமாக திருகோணமலை மாவட்டத்திலிருந்து இரண்டு தமிழரும் ஒரு முஸ்லீமும் தெரிவு செய்யப்படும் நிலை இருந்தது. 1977 வரை இந்நிலை தொடர்ந்திருந்தது. 1977இல் சேருவல தொகுதி உருவாக்கப் பட்டதைத் தொடர்ந்து ஒவ்வொரு இனத்திலுமிருந்து தலா ஒருவரே தெரிவு செய்யப்பட்டனர். 1989ம் ஆண்டு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இம் மாவட்டத்தில் ஏறத்தாழ மூன்று இனங்களும் சமமாக இருப்பதனால் தேர்தல் முறைமையின் பண்புக்கு ஏற்ப இனங்களின் பிரதிநிதித்துவ எண்ணிக்கை மாற்றமடைந்து வருகின்றது. போனஸ் ஆசனம் முதலாவது வரும் கட்சிக்கு வழங்கப்படுவதால் ஒரு இனத்திற்கு இரண்டு ஆசனங்களும் ஏனைய இனங்களுக்கு ஒவ்வோர் ஆசனமும் கிடைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் நிலங்கள் 96. ச.மைல்களைப் பிடித்துள்ள திருகோணமலை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 2630 ச.மைல்களாகும். இதில் திருக்கோணமலைத் தேர்தல் தொகுதி 461.30 ச.மைல்களையும், மூதூர் தேர்தல் தொகுதி 570.70 ச.மைல்களையும், சேருவல தேர்தல் தொகுதி 1598.80 ச.மைல் களையும் உள்ளடக்கியுள்ளது. இவற்றில் திருகோணமலைத் தேர்தல் தொகுதியில் தமிழரும், மூதூர்த் தேர்தல் தொகுதியில் முஸ்லீம்களும், சேருவல தேர்தல் தொகுதியில் சிங்களவரும் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.

காடுகளைப் பொறுத்தவரை கூட திருகோணமலை மாவட்ட காடுகளின் அடர்த்தியான விஸ்தீரணம் 870 ஹெக்ரேயர் ஆகும். சாதாரண காடுகள் 16,310 ஹெக்ரேயரில் அமைந்துள்ளன. சேருவல தேர்தல் தொகுதியில் மட்டும் 9510 ஹெக்ரேயர் காடுகள் உள்ளன. பெரிய பிரதான குளங்கள் அனைத்தும் சேருவர தேர்தல் தொகுதியிலேயே உள்ளன. சிறிய பிரதான நீர்ப்பாசனக் குளங் களிலும் பெரும்பாலானவை சேருவல தேர்தல் தொகுதியிலேயே உள்ளன. இத் தொகுதி மூதூரின் தென் எல்லையிலிருந்து ஆரம்பித்து முல்லைத்தீவு எல்லைவரை பரந்துள்ளது.

இச் சேருவர தேர்தல் தொகுதியில் ஐந்து பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கோமரங்கடவல, சேருவல, மொரவேவா, பதவிசிறீபுர, கந்தளாய் என்பன அவையாகும்.

இவ்வாறு திருகோணமலை மாவட்டத்தின் பெரும் பகுதியைக் கோறையாக்கி கைப்பற்றினாலும், திருகோணமலை மாவட்டத்தின் தலைநகர் திருகோணமலையாக இருப்பது பேரினவாதிகளுக்கு பெரிய சங்கடமாகியுள்ளது. குடியேற்றங்களை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வலுப் படுத்துவதற்கு மாவட்டத்தின் தலைநகர் தங்களின் கைக்குள் வைத்திருப்பது அவசியம் என உணர்கின்றனர். இதனாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலமாக தமிழர்கள் பெரும்பாண்மையாக உள்ள திருகோணமலை நகருக்குள் ஊடுருவிக் குடியேறும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நகரை நோக்கிய ஊடுருவல் குடியேற்றங்கள், வியாபாரக் குடியேற்றம், மீனவர் குடியேற்றம், கைத்தொழில் குடியேற்றம் என்ற வகையில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன.

## திருகோணமலை மாவட்டம்

மொத்த நிலப்பரப்பு - 2630 ச.மைல்

திருமலை மாவட்ட தேர்தல்தொகுதிகள்

| தொகுதிகள் | நிலப்பரப்பு | வீதம் | பெரும்பாண்மையானோர் |
|---|---|---|---|
| திருகோணமலை | 461.30 ச.மைல் | 17.52 | தமிழர் |
| மூதூர் | 570.70 ச.மைல் | 21.67 | முஸ்லீம் |
| சேருவல | 1598.80 ச.மைல் | 60.76 | சிங்களவர் |

## சேருவல தேர்தல்த் தொகுதி பிரதேசசபைகள்

| பிரதேச சபைகள் | நிலப்பரப்பு |
|---|---|
| • கோமரங்கடவல | 285 ச.மைல் |
| • சேருவல | 279 ச.மைல் |
| • ஈச்சிலம் பத்தை | 98 ச.மைல் |
| • மொரவேவ | 322 ச.மைல் |
| • பதவி சிறீபுர | 217.70 ச.மைல் |
| • கந்தளாய் | 397.30 ச.மைல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இனம் | ஆண்டு | தொகை | வீதம் |
|---|---|---|---|
| தமிழர் | 1901 | 17,069 | 60.0% |
| | 2012 | 122,080 | 32.3% |
| முஸ்லீம் | 1901 | 8,258 | 29.0% |
| | 2012 | 152,080 | 40.0% |
| சிங்களவர் | 1901 | 1,203 | 4.2% |
| | 2012 | 101,991 | 27.0% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை வெளிவந்த நூல்கள்

1. நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கையும் தமிழ் மக்களும். - சி.அ.யோதிலிங்கம்
2. இந்தியாவும் தமிழ் மக்களும். - சி.அ.யோதிலிங்கம்
3. நினைவு கூர்தல் - 2017 - நிலாந்தன்
4. "தமிழ் அரசியலின் இலக்கும் வழிவரைபடமும்" சி.அ.யோதிலிங்கம்
5. மோடியின் இலங்கைப் பயணமும் மலையகமும். சி.அ.யோதிலிங்கம்
6. இந்து சமுத்திரமும் சீனாவும். - கலாநிதி.கே.ரீ.கணேசலிங்கம்
7. வட - கிழக்கு இணைப்பும் முஸ்லீம் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
8. இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேச அனுபவங்கள். - சி.அ.யோதிலிங்கம்
9. ஈழத்தமிழர் அரசியல் வரலாறு - 1883 தொடக்கம் 1968 வரை (சுருக்க குறிப்புக்கள்) பாகம் - 01 - சி.அ.யோதிலிங்கம்
10. வட கொரியாவும் சர்வதேச அரசியலும் கலாநிதி. கே.ரீ. கணேசலிங்கம்
11. இலங்கை இந்திய ஒப்பந்தமும் தமிழ் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
12. மலையக மக்களின் அடையாளம் எது? - சி.அ.யோதிலிங்கம்
13. ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் வளர்ச்சிக்கட்டங்கள் - சி.அ.யோதிலிங்கம்
14. 2009 இற்குப் பின்னரான தமிழ் இராஜதந்திரம் - நிலாந்தன்
15. தமிழ்த் தேசியம்! நெருக்கடிகளும், வாய்ப்புக்களும் சி.அ.யோதிலிங்கம்
16. கன்னியாவைப் பாதுகாப்போம் - சி.த. காண்டீபன், சி.கமலகாந்தன், சி.அ.யோதிலிங்கம்
17. இளைய தலைமுறைகளுக்கு ஞாபகங்களை கடத்துங்கள் - நிலாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும் முன்நகர்த்த வேண்டிய பணிகளும் - சி. அ. யோதிலிங்கம்

19. புதிய அரசியல் கலாச்சாரமே இன்றைய தேவை - சி. அ. யோதிலிங்கம்

20. தமிழ்மொழி புறக்கணிப்புக்கு வயது - 64 - சி. அ. யோதிலிங்கம்

21. கிழக்கு! தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து விலகிச் செல்கிறதா? -சி. அ. யோதிலிங்கம்

22. இனப்பிரச்சனை என்றால் என்ன? - சி. அ. யோதிலிங்கம்

23. தமிழகமும் ஈழத்தமிழரும் - சி. அ. யோதிலிங்கம்

24. இரண்டாவது குடியரசு யாப்பும் (1978) தமிழ் மக்களும் -சி. அ. யோதிலிங்கம்

25. தமிழ் தேசிய அரசியலும் புலம்பெயர் மக்களும் -சி. அ. யோதிலிங்கம்

**விலை - ரூபா 50.00**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org